





ஈரோடு வடக்கு மாவட்டக் கழக அலுவலக திறப்பு விழா மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் மாநிலங்களவை உறுப்பினரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான அந்தியூர் ப.செல்வராசு கழக கொடி ஏற்றி கழக கொடி ஏற்றினார். ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் அமைச்சருமான சு. முத்துசாமி அலுவலகத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவெறும்பூர் தொகுதியில்

# கட்டிடங்கள் உட்பட திட்டப் பணிகள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பார்வையிட்டார்!





திருச்சி, ஜூன் 16–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொளி வாயிலாக, திருச்சி திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட வாழவந்தான் கோட்டை ஊராட்சியில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.14.31 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட அங்கன்வாடி மையம்,

வாழவந்தான் கோட்டை ஊராட்சி அய்யம்பட்டியில் மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை உறுதித்திட்ட நிதி ரூ.12.50 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட நியாய விலைக்கடை,

பத்தாளப்பேட்டை ஊராட்சியில் குழந்தைநேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதி ரூ.32.80 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கான இரண்டு வகுப்பறைகளுடன் கூடிய கூடுதல் கட்டிடம்,

சோழமாதேவி ஊராட்சி பீபிள்ஸ் நகரில் நபார்டு நிதி ரூ.8.04 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி,

நவல்பட்டு முதல்நிலை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட நிதி ரூ.12.67 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட நியாய விலைக்கடை,

பழங்கனான்குடி ஊராட்சி பூலாங்குடியில் மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை உறுதித்திட்ட நிதி ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட அங்கன்வாடி, நவல்பட்டு ஊராட்சி அண்ணா நகரில் நபார்டு நிதியில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி,

குண்டூர் ஊராட்சியில் 10 ஆயிரம் லிட்டர் மற்றும் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுடன் இருவேறு இடங்களில் நபார்டு நிதியில் இருந்து புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்,

குண்டூர் ஊராட்சி திருவளர்ச்சிப்பட்டியில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுடன் நபார்டு நிதியில் இருந்து புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கீழமுல்லைக்குடி ஊராட்சி காந்திபுரத்தில் நபார்டு நிதி ரூ.18.42 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகிய மேற்குறிப்பிட்ட அனைத்து பணிகளையும் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.எஸ்.எம்.கருணாநிதி, கங்காதரன் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு

# பெரம்பலூர் மாவட்டத்தில் அணிகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர், ஜூன் 15-

பெரம்பலூர் மாவட்டத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஜீன் மாதம் முழுவதும் ஒவ்வொரு அணிகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இது குறித்து மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

இளைஞர் அணி! 15.06.2025 காலை: 10.00 மணி.

பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்கு பிரட் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

பொறியாளர் அணி! 15.06.2025. மதியம்: 12.00 மணி

துறைமங்கலம் ரோவர் ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் மதிய உணவு மற்றும் புத்தாடைகள் வழங்குதல .

தகவல் தொழில்நுட்ப அணி! 16.06.2025.12.30 மணி.

பெரம்பலூர் கௌதம புத்தர் அறக்கட்டளையில் உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

மாணவர் அணி! 20.06.2025 காலை 10.00 மணி.

பெரம்பலூர் அரசு மேல்நிலைப்பள்ளி பள்ளி மாணவர்களுக்கு நோட்டு, புத்தகம் மற்றும் பேனா உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

சுற்றுச்சூழல் அணி! 21.06.2025 காலை: 10.00 மணி.

பெரம்பலூர், தண்ணீர் பந்தல் முதியோர் ஆசிரமத்தில் உள்ள முதியவர்களுக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி! 22.06.2025 காலை: 10.00 மணி.

பெரம்பலூர் கர்ணம் சகுந்தலா திருமண மண்டபத்தில் நடைபெறும்

புகழரங்கம் நிகழ்ச்சியில் தோழர்.அருள்மொழி,

பட்டிமன்ற பேச்சாளர் மலர்விழி கலந்து கொள்கின்றனர்.

தொழிலாளர் அணி! 23.06.2025 காலை: 10.00 மணி.

சிறுகுடல் கிராமத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு வேஷ்டி, சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

அயலக அணி! 23.06.2025. மதியம்: 12.00 மணி.

லெப்பைக்குடிக்காடு பேரூராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

விளையாட்டு மேம்பாட்டு அணி! 24.06.2025. காலை: 10.00 மணி.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் விளையாட்டு உபகரணம் வழங்குதல் (ஒரு பள்ளிக்கு ரூ.2500)

இடம்: மாவட்ட தி.மு.க. அலுவலகம், பெரம்பலூர்

மீனவர் அணி! 25.06.2025.காலை: 10.00 மணி.

வெள்ளுவாடி ஊராட்சியில் பள்ளி குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகம் வழங்குதல்.

தூய்மைப் பணியாளர்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்குதல்.

இலக்கிய அணி! 26.06.2025. காலை: 10.00 மணி.

வேப்பந்தட்டை அரசுக் கல்லூரியில் தமிழில் இளங்கலை மற்றும் முதுகலை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு என் குரலில் திருக்குறள் உரைநூல் வழங்குதல்.

வர்த்தக அணி! 26.06.2025. மதியம்: 12.00 மணி.

பாடாலூர் பெரியார் குடில் பள்ளியில் உணவு மற்றும் மானவர்களுக்கு நோட்டு, புத்தம் வழங்குதல்.

கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை! 27.06.2025. காலை: 10.00 மணி.

இலுப்பைக்குடி கிராமத்தில் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு, பேனா வழங்குதல்.

தூய்மைப்பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

சிறுபான்மையினர் அணி! 27.06.2025. காலை: 12.00 மணி.

பெரம்பலூர், தீரன் நகர்

வேலா கருணை இல்லத்தில் உள்ள ஆதரவற்றவர்களுக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

தொண்டர் அணி! 28.06.2025. காலை: 10.00 மணி.

கோனேரிப்பாளையம் முதுயுகம் முதியோர் இல்லத்தில் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

அமைப்பு சாரா ஓட்டுநர் அணி! 28.06.2025. மதியம்: 12.00 மணி.

பெரம்பலூர், தீரன் நகர்

வேலா கருணை இல்லத்தில் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

விவசாய அணி! 30.06.2025. காலை: 08.00 மணி.

பெரம்பலூர் கௌதம புத்தர் அறக்கட்டளையில் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

விவசாயத் தொழிலாளர் அணி 30.06.2025. மதியம்: 12.00 மணி.

பெரம்பலூர்,தீரன் நகர்

வேலா கருணை இல்லத்தில் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

மருத்துவ அணி! 0.06.2025. காலை: 10.00 மணி.

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் இரத்ததான முகாம்.

நெசவாளர் அணி! 30.06.2025. மதியம்: 01.00 மணி.

செட்டிக்குளம் ஊனமுற்றோர் குழந்தைகளுக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளை மாவட்ட அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் சிறப்பாக நடத்திட வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நகரம், பேரூர், ஒன்றியங்களில்

# தி.மு.க. அலுவலகங்கள் திறப்பு விழா (ம) செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் .இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம், ஜூன் 15 –

விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் எஸ்.லட்சுமணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:–

விழுப்புரம் மத்திய மாவட்ட தி.முக. சார்பில் வரும் 14.06.2025 (சனிக்கிழமை) அன்று கிளியனூர் மேற்கு ஒன்றியம், கிளியனூர் கிழக்கு ஒன்றியம், வானூர் கிழக்கு ஒன்றியம், வானூர் மத்திய ஒன்றியம், வானூர் மேற்கு ஒன்றியம், 15.06.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காணை கிழக்கு ஒன்றியம், கோலியனூர் மத்திய ஒன்றியம், கோலியனூர் தெற்கு ஒன்றியம், விழுப்புரம் மேற்கு நகரம், விழுப்புரம் கிழக்கு நகரம் மற்றும் 16.06.2025 (திங்கட்கிழமை) அன்று கண்டமங்கலம் வடக்கு ஒன்றியம், கண்டமங்கலம் மத்திய ஒன்றியம், கண்டமங்கலம் தெற்கு ஒன்றியம், கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், வளவனூர் பேரூராட்சி, கோலியனூர் கிழக்கு ஒன்றியம் ஆகிய நகரம், பேரூராட்சி மற்றும் ஒன்றியங்களில் தி.மு.க. அலுவலகங்கள் திறப்பு விழாவும், இதனை தொடர்ந்து செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டமும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட/நகர/பேரூர்/ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், நிர்வாகிகள்

அனைவரும் தவறாமல் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கரூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ 7.34 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சி திட்ட பணிகளை தொடங்கி வைக்கும் நிகழ்வில் கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி கரூர் சட்டமன்றத் தொகுதி, நன்னியூர் ஊராட்சி, அண்ணா நகரில், புதிய நாடக மேடையை திறந்து வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் அருகில் உள்ளனர்.

